திருவள்ளுவர் ஆண்டு 2056 04.06.2025

# உலகத்தமிழ்

இதழ் உஅஎ (287)

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்



களவென்னும் காரறிவாண்மை எனத் தொடங்கும்
திருக்குறள் எண் இருநூற்(று) எண்பத்(து) ஏழு;

அளவென்னும் சொற்களால் அமிழ்தக் கருத்துகளை அழைத்துவரும்
உலகத்தமிழிதழ் இருநூற்(று) எண்பத்(து) ஏழு

உள்ளடக்கம்

1. கொள்கை விளக்கக் குறிப்பு 4

2. நூலேணி (தமிழ் வளர்ச்சித்துறை வெளியீடுகள்) 5

3. நூலேணி

(உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்) 6

4. தமிழெழுச்சி 7

5.கலைஞர் எனும் சகாப்தம்...! 8

6. அவ்வப்போது! 9

7. தேன்துளி! 10

8. சேரமன்னர் வரலாறு! 11

9. குறளமுதம் 12

10. ஆழங்கண்ட ஆளுமையர்! 13

11. நற்றிணை – ஆங்கிலம் 14

12. குழந்தைக் கவிஞர் பரம்பரை! 15

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 13. கல்வி என்பது பெருங்கடல் | 16 |
| 14. Brief Life Sketches Of The European Scholars | 17 |
| 15. வள்ளுவம்! | 18 |
| 16. தமிழன்னை நான்மணிமாலை! | 19 |
| 17. புலவர்கள் கேட்கும் வரம் | 20 |
| 18. மலாயா ஆவணங்கள்! | 21 |
| 19. பூ மழை | 23 |
| 20. அறிவோம்! | 27 |
| 21. பொருள்களின் இணையப் பயன்பாடுகள் | 29 |
| 21. எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே! | 31 |
| 22. செய்தி வெளியீடு! | 32 |
| 22. சட்டவியல் அகரமுதலி! | 38 |
| 23. புகழ் வணக்கம்! | 39 |

# கொள்கை விளக்கக் குறிப்பு...

தமிழ் வளர்ச்சித் துறையின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் (2024 - 2025)

## இயல் - 1 (தமிழ் வளர்ச்சித் துறை)

### ஆ) பள்ளி/கல்லூரி மாணவர்களுக்குக் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

மாணவப் பருவத்திலேயே தமிழில் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் கவிதை எழுதும் திறனை வளர்க்கவும் தமிழ்ப்பற்றை மேம்படுத்தும் நோக்கிலும் 2004ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் பள்ளிகளில் 11 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடத்தப்பெற்றுப் பரிசுத்தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**2023-2024 - ஆம் ஆண்டில் நடைபெற்ற போட்டியில் பங்கேற்ற மாணாக்கர்கள் விவரம்**

| | மாணவர்கள் | மாணவியர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| பள்ளி | 508 | 1211 | 1719 |
| கல்லூரி | 572 | 1426 | 1998 |
| மொத்தம் | 1080 | 2637 | 3717 |

### b) Poetry, Essay Writing, Elocution Competitions for School / College students

*Essay writing and Elocution competitions have been conducted to the 11th and 12th standard students and college students at District level and State level every year and cash prizes have been awarded since 2004, with the view of improving the skills of oration, writing and poetry writing in Tamil since childhood and also to develop their passion towards Tamil language.*

**Break-up details of 3717 students participated in various competitions held during 2023-2024.**

| Students from | Boys | Girls | Total |
|---|---|---|---|
| School | 508 | 1211 | 1719 |
| College | 572 | 1426 | 1998 |
| Total | 1080 | 2637 | 3717 |


# நூலேணி

## தமிழ் வளர்ச்சித் துறை வெளியீடுகள்




| | |
|---|---|
| நூலின் பெயர் | *அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் (தொகுதி - 11)* |
| நூலாசிரியர் | *தமிழ் வளர்ச்சித் துறை* |
| பதிப்பாண்டு | *2025* |
| விலை | *ரூ.100/-* |
| பக்கங்கள் | - |

| | |
|---|---|
| நூலின் பெயர் | *அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் (தொகுதி - 12)* |
| உரையாசிரியர் | *தமிழ் வளர்ச்சித் துறை* |
| பதிப்பாண்டு | *2025* |
| விலை | *ரூ.100/-* |
| பக்கங்கள் | - |







# நூலேணி

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்


121




| | |
|---|---|
| நூலின் பெயர் | இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் |
| நூலாசிரியர் | மு. அப்துல் சமது |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.40/- |
| பக்கங்கள் | 128 |
| வெளியீட்டு எண் | 250 |



| | |
|---|---|
| நூலின் பெயர் | பாரதியின் சமுதாயச் சிந்தனைகள் |
| பதிப்பாசிரியர்கள் | க. இளமதி சானகிராமன் |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.25/- |
| பக்கங்கள் | 82 |
| வெளியீட்டு எண் | 521 |



| | |
|---|---|
| நூலின் பெயர் | சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர் |
| பதிப்பாசிரியர் | அன்னிதாமசு |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.80/- |
| பக்கங்கள் | 290 |
| வெளியீட்டு எண் | 522 |



| | |
|---|---|
| நூலின் பெயர் | தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் தமிழ்த் தொண்டும் மொழியியல் பங்களிப்பும் |
| நூலாசிரியர் | பேரா.கோ.சீனிவாசவர்மா |
| பதிப்பாண்டு | 2004 |
| விலை | ரூ.25/- |
| பக்கங்கள் | 82 |
| வெளியீட்டு எண் | 523 |



# தமிழெழுச்சி...





பக்கத் திருந்தமணிப் பாவையுடன் சோலையெலாம்
ஒக்க மறைந்திடலும், ஓஹோ! எனக்கதறி
வீழ்ந்தேன். பிறகு விழிதிறந்து பார்க்கையிலே
சூழ்ந்திருக்கும் பண்டைச் சுவடி, எழுதுகோல்,
பத்திரிக்கைக் கூட்டம், பழம்பாய் –– வரிசையெல்லாம்,

– பாரதியார்



பட்டாளச் சக்கரவர்த்தி பார்த்தாலும் உன்சிரிப்புக்
கட்டாணி முத்துக்குக் காலில்விழ மாட்டாரோ?
என்றழுதான் விம்மி இளையான், கவியரசன்
குன்றும் இரங்கும்! கொடும்பாம்பும் நெஞ்சிளகும்!

– பாரதிதாசன்

ஆசிரியம்!




# கலைஞர் எனும் சகாப்தம்...!

ஒய்வறியா சூரியன், பல்துறை வித்தகர், சமத்துவ நாயகன் என்னும் சிறப்புகளுக்கெல்லாம் உரியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தமிழுக்காகவும் தமிழக மக்களின் நலனுக்காகவும் தனது கடைசி காலம் வரை பாடுபட்டவர். நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள திருக்குவளைஎனும் ஊரில் 1924ஆம் ஆண்டு சூன் 3ஆம் நாள் பிறந்தார்.

கலைஞர் கருணாநிதி அவர்கள் தடம் பதிக்காத கலை வடிவங்களே இல்லை எனச் சொல்லும் அளவிற்குக் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், நாவல், வரலாறு என எல்லா வடிவங்களிலும் முத்திரை பதித்து அனைத்திலும் தனது தனித்திறமையை ஏற்படுத்தியுள்ளார்.

15 நாவல்கள், 20 நாடகங்கள், 15 சிறுகதைகள், 210 கவிதைகள் எனத் தனது எழுத்துகள் மூலமாகத் தமிழுக்கும் மக்களுக்கும் அரும் தொண்டாற்றியவர். 'உடன் பிறப்பே', 'நண்பனுக்கு' போன்ற தலைப்புகளில், ஏழாயிரத்திற்கும் அதிகமான கடிதங்களை இயற்றியுள்ளார். திருக்குறள் உரை, சங்கத்தமிழ், குறளோவியம், தென்பாண்டிச் சிங்கம், ரோமாபுரி பாண்டியன் முதலான 178க்கும் அதிகமான உரைநடை, இலக்கிய நூல்களை எழுதியுள்ளார். தன்னுடைய வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூலாக 'நெஞ்சுக்கு நீதி' எழுதினார்.

ஐயன் வள்ளுவனுக்குக் குமரியில் சிலை, சென்னையில் வள்ளுவர் கோட்டம், 2010இல் கோவையில் தமிழுக்காகப் பிரம்மாண்டமாக நடத்திய 'செம்மொழி மாநாடு' உள்ளிட்ட தன் பணிகளால் தமிழுக்குப் பெருமை சேர்த்தார். கலைஞர் தமிழ் மீது வைத்த அளவற்ற காதல் அளப்பறியாதது.

கடந்த 2009-இல் 'உலக கலைப் படைப்பாளி விருது' - பெற்றார். அரசியலில் தொண்டு, தமிழுக்கு ஆற்றிய சேவை, திரைப்படத் துறையில் புதிய படைப்புகள் எனப் பன்முகத்தன்மை கொண்டவர்.

"தமிழுக்குச் செம்மொழித் தகுதி பெற்றுத்தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமையைப் போற்றிடும் வகையில் அவர் பிறந்தநாளான சூன்திங்கள் 3ஆம் நாள் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் ஆண்டுதோறும் செம்மொழிநாள் விழாவாகக் கொண்டாடப்படும்" என அறிவிக்கப்பட்டது.


அதனடிப்படையில், 03.06.2025ஆம் ஆண்டு அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் கலைஞர் செம்மொழி விருது, செம்மொழி நாள் போட்டிகளில் மாநில அளவில் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள், முனைவர் பட்டம் பெற்ற ஆராய்ச்சி அறிஞர்களுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்குதல், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் ஐவருக்கு உதவித்தொகை ஒப்பளிப்பு ஆணை வழங்குதல், தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனை மலர் வெளியிடல் எனச் சிறப்பாக நடந்தேறியது 'செம்மொழி நாள் விழா'.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் 102-ஆவது பிறந்தநாளில் அவரின் பணியினையும் தமிழ்த் தொண்டினையும் எண்ணிப் பெருமை கொள்வோம். தமிழ்கூறும் நல்லுலகம் உள்ளவரை கலைஞரின் புகழ் நிலைத்து நிற்கும்....!



# அவ்வப்போது!

- முனைவர் ஔவை அருள்




கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் மையெழுத்தின் மூலம் மாண்புற இணைத்து வலிமையான வரலாற்றுப் பதிவுகளுக்கும் வாழ்வியல் உணர்வுகளுக்கும் வடிவம் கொடுக்கும் வசீகரக் கலையாக அச்சுக்கலை விளங்கி வருகிறது.

ஐரோப்பியர்களால் நம் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட அச்சுக்கலை என்னும் பொறியியல் நுட்பம், ஆகச்சிறந்த இயந்திரங்கள் துணைக்கொண்டு இன்று அறிவாயுதக் கூடமாக ஓங்கி வளர்ந்து உயர்ந்து நிற்கிறது.

கற்பாறைகள், செப்புத் தகடுகள், பட்டுத் துணிகள், ஓலைச் சுவடிகள் என்று பல விதமாக பயணித்த எழுத்து வடிவ எண்ணங்கள் அச்சுக் கலையின் மூலம் தான் ஆகாயம் தொட்டன என்பதை நாம் அறிவோம்.

அதேபோல் இந்தியாவின் அச்சுக்கலைத் தோற்றம், நம் தமிழ்நாட்டில் இருந்து தான் தொடங்கியது என்பது நமக்கான பெருமிதங்களில் ஒன்று என்பதையும் நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

சென்னைப் பெருநகர மாநகராட்சிக்கு உட்பட்ட வள்ளலார் நகரில் அமைந்துள்ள நம் அரசு மைய அச்சகம் 193 ஆண்டுகள் பழைமைச் சிறப்பு வாய்ந்தது.

இன்று நவீன வசதிகளுடன் 1,25,000 சதுர அடி பரப்பளவில் இரண்டு அடுக்குத் தளங்களுடன் கூடிய புதிய கட்டடத்தில் நிருவாகம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளுடன் மைய அச்சகம் செவ்வனே செயல்படுகிறது.

மந்தணப் பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள் ஞாயிற்றுக்கிழமை உட்பட அனைத்து வார நாள்களிலும் ஆர்வமுடன் பணிபுரிந்து வருகிறார்கள்.

என்றும் போல் ஏற்றமும் எழில்மிகு தோற்றமும் கொண்டு நம் எழுதுபொருள் அச்சுத்துறை கண்ணும் கருத்துமாய் கடமையாற்றி வருகிறது.

*********




## தேன்துளி - 1

இந்தியச் சுதந்திரப் போரின் நூற்றாண்டு விழாவின் (1957) போது, நடைபெற்ற பேச்சுப் போட்டியில், பள்ளி மாணவர்களில் நா.காமராசன் முதல் பரிசு பெற்றார்.

அதே பேச்சுப்போட்டியில், கல்லூரி மாணவராக இருந்த ஔவை நடராசன் அவர்கள் முதற்பரிசு பெற்றார். பெருந்தலைவர் காமராசர் அந்தப் பரிசுகளை வழங்கினார்.

## தேன்துளி - 2



கடலில் எழும்பிய இராட்சத அலைகளின் காரணமாக நூற்றுக்கணக்கான நட்சத்திர மீன்கள் கரையில் ஒதுங்கின.

கரையோரமாய் நின்று கொண்டிருந்த அந்தச் சிறுவன் குனிந்து, துடித்துக் கொண்டிருந்த நட்சத்திர மீன்களை, ஒவ்வொன்றாக எடுத்துக் கடலுக்குள் எறிந்து கொண்டே இருந்தான். அவனது முயற்சியால் ஒரு சில மீன்கள் உயிர் பிழைத்தன.

ஆனாலும் மீண்டும் மீண்டும் பல புதிய நட்சத்திர மீன்கள் கரையில் ஒதுங்கிய வண்ணம் இருந்தன.

இதைத் தூரத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெரியவர், சிறுவனின் அருகில் வந்து, "சில மீன்களை மட்டும் நீ காப்பாற்றுவதால் உனக்குள் என்ன மாற்றம் ஏற்பட்டுவிடப் போகிறது?" என்று கேட்டார்.

அந்தச் சிறுவனோ, கையில் ஒரு மீனை எடுத்து, "இதோ, இந்த மீனுக்கு என்னுடைய செய்கை, ஒரு மிகப்பெரிய மாற்றத்தை நிச்சயம் ஏற்படுத்தும்" என்றவாறே அதைக் கடலுக்குள் வீசி, அதற்கு உயிரூட்டினான்.

நாம் அடைய வேண்டிய இலக்கு வெகு தூரத்தில் இருக்கிறது. நமது பயணத்திற்குத் திசைகாட்டியாய் இருந்து, உற்சாகத்தை வாரி வழங்கி, நம் வெற்றியில் குதூகலம் அடைகிற உங்களைப் போன்றோர் உடனிருக்கையில், வானமும் நம் கைக்கு எட்டும் தூரம்தான்

## முடிப்புரை

### சேரமான் இளங்குட்டுவன்:

இச் சேரமானுடைய பெயரை நோக்கும்போதே இவன் குட்டநாட்டு அரசர் குடிகள் ஒன்றில் தோன்றியவன் என்பதை அது காட்டிவிடுகிறது. இவனைப் பற்றி அரசியல் குறிப்பொன்றும் இதுகாறும் கிடைக்கவில்லை. இளங்கடுங்கோ, இளஞ்சேரல், இரும்பொறையென்றாற் போலச் சேரமன்னர் நிரலுள் இவன் இளங்குட்டுவன் எனப்படுகின்றான். தான் தோன்றிய குட்டுவர் குடியில் இவன் இளைய னாதல் பற்றி இவனை இளங்குட்டுவன் என்றனர். இவன் பாடிய பாலைப் பாட்டு ஒன்று அகநானூற்றில் உளது. வேறே இவன் பாடிய பாட்டுகளும் இல்லை.

காதலொழுக்கம் பூண்ட, பண்புடைய இளையர் இருவர் இடையே ஒருவரை யொருவர் இன்றியமையாத காதலன்பு மிகுந்தது. காதலியை மணந்து கோடற்குரிய முயற்சியில் காதலன் ஈடுபட்டிருக்கையில், வேற்றவர் மணப் பேச்சும் பெற்றோர் மகள் மறுப்பர் என்ற குறிப்பும் முற்பட்டெழுந்தன. காதல் மகளின் கற்பறம் அறியாத பெற்றோர் பால் இருந்து அறம் கெடுதலை விரும்பாத அவள், பெற்றோர் செயலைத் தன் காதலனுக்கு உணர்த்துகிறாள். கற்பறம் காத்தற்கண் மணமாகு முன்னே காதலனுடன் தனிமையில் உடன்போதலைக் கற்புடைய பெண்ணுக்கு அறமாம் என்பது தமிழ் நூலோர் முடிபு. அதனால் ஒருநாள் இரவில் யாவர் கண்ணுக்கும் தெரியாமல் இருவரும் கூடி அவனுடைய ஊர்க்குச் சென்று அங்குள்ள சான்றோர் அறிய மணம் முடித்துக் கொள்ளுகின்றனர்.

அந்நிலையில் மகட்போக்கிய தாய் செவிலியிடம் மகளியல்பு சொல்லி வருந்துகின்ற துறை அமைந்தது இந்த இளங்குட்டுவனாரது பாட்டு. தன் மகள் போகிய காட்டு வழியின் கடுமையும் அருமையும் மகளினுடைய மென்மையும் தாய் சொல்வதாக இந்தச் சேரமான் வகுத்துரைக்கும் இப் பாட்டு நம்மை இன்புறுத்துகிறது. மகளின் இளமையையும் மென்மையையும் நினைத்த தாய்,

**"நோகோ யானே; நோக்கும் உள்ளம்;**
**அந்தீங் கிளவி ஆயமொடு கெழீஇப்**
**பந்துவழிப் படர்குவ ளாயினும் நொந்து, தனி**
**வெம்பும்மன்; அளியள் தானே"**

என்று சொல்லிக் கண்ணீர் வடிக்கிறாள்.

வளரும்...

திருக்குறள் அறத்துப்பால்

– நாகை சொ. தண்டபாணிப்பிள்ளை

83

## 10. திருக்குறள் விரிவுரை (1939 - திரு.வி.க)

### பழந்தமிழர்

பழந்தமிழறிஞர் கருத்து, சிறிய பன்மையில் படியவில்லை. அவர்தம் நோக்கு, பெரிய ஒருமையில் சென்று ஒன்றியது. வேற்றுமை அவர்க்குப் புலனாகவில்லை; ஒற்றுமையே அவர்க்குப் புலனாகிறது. அவர் நடத்திய வாழ்வு அத்தகையது.

**பழந்தமிழர் மொழியில் ஈண்டு ஒன்று நினைவிற்கு வருகிறது. அது வருமாறு;-**

யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை இகழ்த லதனினு மிலமே

இப்புறப்பாட்டை உற்று உற்று நோக்குக; நோக்கி நோக்கி உன்னுக; உன்னி உன்னி அதில் ஒன்றுக. பாட்டுப் பொருளில் வேற்றுமைக்கு அடமுண்டோ? பிணக்குக்கு இடமுண்டோ? எல்லாம் ஒருமை! யாதும் ஊர், யாவருங் கேளிர் (சுற்றத்தார்).

வளரும்...



# ஆழங்கண்ட ஆளுமையர்...

89

- ஔவை நடராசன்

## காயப்படாத சூரியன் களங்கமிலாத ஓமந்தூரார்

ஓமந்தூரார், யாரையும் எளிதில் நம்புவதில்லை. துறவு என்று வந்தபோதும் கூட, தாங்க முடியாத கோபம், அவரிடத்தில் உண்டு. "அப்பர் சான்றோர் இல்லம்" என வடலூரில் நடத்தி வந்தார். மனைவி, குழந்தைகள் என்று யாரும் அவருக்கு இல்லை. தன் சார்புடைய யாரையும் துணைக்கு வைத்துக் கொள்ளும் பழக்கமும் இல்லை.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், சென்னியப்ப முதலியார், சுத்தானந்த பாரதியார் என்று அவருக்கு நண்பர்கள் சிலர். ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் பலர் அவருக்கு நண்பர்கள்தான். ஆனால், அவர் யாரையும் பெரிதாக நினைத்ததில்லை.

எனக்கு ஒரு கார் கொடுங்கள். நான் பத்துக் கோயில்களுக்குப் போய்வர வேண்டும். ஒரு காசு எனக்கு நீங்கள் செலவு செய்யக்கூடாது. எண்ணெய் எல்லாம், நான் எடுத்துக் கொள்வேன் என்று அருட்செல்வருக்கு, ஒரு கடிதம் எழுதினார்.

அருட்செல்வர் மகிழ்ச்சியோடு சரி என்று தன் காரை அனுப்பினார். என்னைத்தான் அருட்செல்வர் ஓமந்தூராரிடம் அனுப்பினார். சிதம்பரம், திருவண்ணாமலை, திருப்பாதிரிப் புலியூர் என்று பல கோயில்களுக்குச் சென்றோம். மதுரை வரை சென்று, வேண்டாம்! போதும் என்று திரும்பச் சொன்னார். மனம் போன போக்கில் இருந்தார் அவர். ஆனால், எண்ணெய் நிரப்பியது அருட்செல்வர்தான். என் காரில் எவரும் எதனையும் நிரப்பக் கூடாது என்று கூறும் அருட்செல்வர் அல்லவா!

அதன்பின், கடலூருக்குத் திரும்பி விட்டோம். தமிழகத்தில் யாருமே, எனக்கு நம்பிக்கைக்கு உரியவராகத் தெரியவில்லை என்று பலமுறை கூறியதோடு பல்வேறு அரசியல் தலைவர்களைப் பற்றி என்னிடம் பேசிவந்தார் ஓமந்தூரார்.

தன்னுடைய பள்ளி, சான்றோர் குருகுலம் முதலியவற்றை, தமக்குப் பின்னால் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அருட்செல்வர் மகாலிங்கத்திடம் சொன்னார். அப்போதுகூட அவர், ஏன் என்னிடம் தருகிறீர்கள்? நான் எல்லா உதவிகளையும் செய்கிறேன். உங்களுக்கு வேண்டியவர்கள் யாருக்காவது, நீங்கள் எழுதலாம் என்று சொன்னார். இல்லை, நீங்கள் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னார் ஓமந்தூரார். அந்தப் பணியை ஏற்றுக்கொண்டதன் விளைவு, இப்போது அந்த நிறுவனங்கள் நூறு மடங்கு பெரிதாகி இருக்கின்றன. ஏறத்தாழ 20 நிறுவனங்கள் ஓபிஆர் பெயரில் இயங்கி வருகின்றன. ஓமந்தூரார் வேண்டிய உணர்விலேயே, வடலூரில் சித்தி வளாகம் என்ற பகுதியைச் சீரமைத்து, ஓர் அரங்கம் அமைத்தார்கள். வடலூரில் குடமுழுக்கு நடத்தினார்கள்.

ஆம் பொதுவாழ்வில் உதித்த அந்தச் சூரியன் காயப்படாத சூரியன்தான்!

வளரும்...

## நற்றிணை - 365

தோழி கூறுதல்...

குறிஞ்சி

கிள்ளிமங்கலம் கிழார் மகனார் சேர கோவனார்

அருங் கடி அன்னை காவல் நீவி,<br>
பெருங் கடை இறந்து, மன்றம் போகி,<br>
பகலே, பலரும் காண, வாய் விட்டு<br>
அகல் வயற் படப்பை அவன் ஊர் வினவி,<br>
சென்மோ வாழி தோழி! பல் நாள்<br>
கருவி வானம் பெய்யாது ஆயினும்,<br>
அருவி ஆர்க்கும் அயம் திகழ் சிலம்பின்<br>
வான் தோய் மா மலைக் கிழவனை,<br>
"சான்றோய் அல்லை" என்றனம் வரற்கே.

## Natrinai - 365

Friend speaks aside...

kuRinchi.

kiLLimangalam kizhAr makanAr chera kovanAr

Shall we betray truths in town hall, fain<br>
ask where does he stay! Why shy,<br>
Him we access, ask why does he abstain!

Isn't he Hill lord! Isn't his sulk mean!<br>
Clouds' thunderous cheat the sky!<br>
But rapids rush in jungles between!

In conic rock is his House up above,<br>
erect , in His triangle normally!<br>
Grove girt delta! Shall we, right now?<br>
Why miss cloacal kiss and shot!

To Continue...

*Prof Sanakaranarayanan is a retired professor in english and a doyen in english language and letters,besides his eminence in tamil and sanskrit,his knowledge of english is surpassing,the difficulty is he always make a fish to roar like a lion! his pedantic style is inevitable. Keep a dictionary read his lines.*

*He has attempted renderings for Saiva Siddhantha treatises, Periyapuranam, Sangam verses and he has penned his rendering the modern poet Erode Tamilanban verses.*

*He resides in Kumbakonam and I always cherish his scholarship as he guided my Doctoral Dissertation on Bard of Avons plays in tamil...*



# குழந்தைக் கவிஞர் பரம்பரை!

- முனைவர் தேவி நாச்சியப்பன்

254

*1936இல் பிறந்த குழந்தை எழுத்தாளர் திருமதி அகிலா சிவராமன் அவர்கள். இரு எம்.ஏ., பட்டங்களையும் எம். எட்., பட்டத்தையும் பெற்றவர்.*

*பாண்டிச்சேரி வானொலி நிலைய இயக்குநராகப் பணியாற்றியவர். பின்னர் சென்னைத் தொலைக்காட்சி இயக்குநராகப் பொறுப்பேற்றவர்.*

*1981ஆம் ஆண்டு முதல் எழுதத் தொடங்கினார். "சிறுவர் கவிதைச் சோலை" என்ற நூலில், வாழ்த்துகள், பண்டிகைகள், சிந்தனைகள், உறவுகள், எண்கள், வண்ணங்கள் போன்ற பதினோரு பகுதிகளில் 96 பாடல்களை வழங்கியுள்ளார்.*

*வழக்கமாகப் பள்ளிகளிலும் பிறந்தநாள் விழாக்களிலும் பிறந்தநாள் வாழ்த்தை ஆங்கிலத்தில் பாடி வாழ்த்துகின்றனர். தற்சமயம் சில பள்ளிகளில் பிறந்தநாள் வாழ்த்துத் தமிழில் பாடப்படுவது மகிழ்ச்சிக்குரியது. 1985ஆம் ஆண்டிலேயே கவிஞர் அகிலா சிவராமன் அவர்கள் தமிழில் பிறந்தநாள் வாழ்த்துப் பாடலைப் பாடியுள்ளார்.*

**'பிறந்தநாள் வாழ்த்து'**

**"இன்று உந்தன் பிறந்தநாள்**
**இன்பமான நல்லநாள்**
**அன்பு நெஞ்சம் வாழ்த்தும் நாள்**
**அனைவருக்கும் இனியநாள்!**




**வாழிய வாழிய வாழியவே**
**வாழ்க பல்லாண்டுகள் வாழியவே**
**வளமொடு திடமுடன் வாழியவே**
**வானுள்ளளவும் வாழியவே!"**

**'அன்பு' பற்றி மற்றொரு பாடல்.**

**அன்பே செல்வம் – அறிவாய் நீ**
**அன்பே பண்பாம் – தெளிவாய் நீ**
**அன்பெனும் பிடியுள்அகப்படுவான்**
**ஆண்டவன் என்றே அறிவாய் நீ!**

**அன்பே அறமாய் நிலைத்திடுமே**
**அன்பே பொருளாய்ப் பெருகிடுமே**
**அன்பால் அகிலம் வாழ்ந்திடுமே**
**அவனியில் அமைதி நிலவிடுமே!**
**பெற்றோரிடத்தில் அன்பு செய்வாய்**
**உற்றோரிடத்தில் அன்பு செய்வாய்**
**மற்றோரிடத்தும் பல்லுயிர்க்கும்**
**மறவாமல் நீ அன்பு செய்வாய்!"**

**–அகிலா சிவராமன்**

*அன்பின் சிறப்புகளை வரிசையாகக் கூறி, பல்லுயிர்க்கும் அன்பு செலுத்தச் சொல்கிறார் கவிஞர் அகிலா சிவராமன் அவர்கள்.*

*****

# கல்வி என்பது பெருங்கடல்



- பேராசிரியர் செ.இரா.செல்வகுமார், கனடா

38

இயற்பியல் என்பது முற்றிலும் சரியான சொல் என்று ஆணித்தரமாக நிறுவிய பின்னரும், முனைவர் இராம.கி அவர்கள் மீண்டும் மீண்டும் மறுக்கின்றார். என் மறுப்புரைகளைப் பேராசிரியர் தெய்வசுந்தரம் நயினார் போன்றோரும் ஏன் கருதத் தவறுகின்றனர்? என் கருத்தில் குற்றம் இருப்பின் எடுத்துரைக்கலாமே. என் கருத்து தவறெனில் ஏற்கத் தயங்கேன்.

நூல், நூற்பு உண்டு

ஏல் ஏற்பு உண்டு

சொல் சொற்பு உண்டு

(சொற்பு *corpu* , *n.* சொல்'-. *Saying, speaking;* சொல்லுகை. சொற்புறுத்தற் குரியன (கம்பரா. நகர்நீ. 16).)

தோல் தோற்பு உண்டு

கல் கற்பு உண்டு.

இயல் இயற்பு அதுபோன்ற இயற்கையே. இயற்கை என்பதிலும் இயல் என்பது இயற்கை என்றாகியுள்ளதைப் பாருங்கள். பல சான்றுகளையும் அடுக்கியிருந்தேன். மீண்டும் எடுத்து இட அணியமே. ஏங்கேனும் பதிந்து வைத்துச் சுட்டியை மட்டும் தர வேண்டும் என நினைக்கின்றேன்.

இயல்பியல் இயற்பியல் இரண்டும் முற்றிலும் சரியே.

இயற்பியல் வழக்கூன்றிய சொல். முற்றிலும் சரியான சொல்.

தமிழில் பலவகையாக பெயர்ச்சொல் ஆக்கலாம். பயில் என்னும் வினையில் இருந்து பயிற்சி என்று பெயர்ச்சொல் ஆக்கலாம். பயிற்றி என்றும் பெயர்ச்சொல் ஆக்கலாம்,

(பழமையும் பயிற்றியும் . . . உடையார் (இறை. 2, பக். 27)...)

நட என்னும் வினையில் இருந்து, நடக்கை, நடப்பு, நடத்தை, நடை என்றெல்லாம் பெயர்ச்சொற்கள் ஆக்கலாம்.

இயற்பியல் செம்மையாக அமைந்த சரியான சொல். ஆங்கிலத்தில் உள்ள *Physics* என்பதற்கு ஈடாக நாம் தமிழில் கொள்ளும் சொல்.

#இயற்பியல்

# BRIEF LIFE SKETCHES OF THE EUROPEAN SCHOLARS

- Mahavidvan **Meenakshi Sundaram**

*Between 1728-29 a terrible famine broke out in Madura and Tanjore and reigned even in the most fertile part of the country, the Cauvery delta. During this time, the Protestant missionaries made use of the prevailing conditions to gain their ends. They enticed Catholics to their fold by means of money. It was at this time perhaps while helping the Bishop of Malapore to redeem these Catholics that Beschi wrote the lovely poem on Mary (Our Lady of Refuge) namely Tirukkā valūrkalampakam.*

*In 1731 he wrote "Our purely Indian dress is not protection against the weather. The strictly vegetarian diet, the bad quality of drinking water, the burning heat of the sun, all these are inconveniences which new comers find unbearable." From this it is evident that Fr. Beschi suffered untold misery, despite all this he loved the poor and worked arduously for their uplift. He had both powerful and influential friends and solicited their help in procuring jobs, for the young converts. In 1730, Fr. Beschi wrote from Yelakkurichi that a school was opened there for Catechists. "A grounding in literature would greatly promote the glory of our faith." Beschi wrote and added "And as I have spent many years on that literature and am looked upon as well versed in it, I was appointed master of the Tamil School." He chose the intelligent among them and taught them Tamil Grammar, Prosody and Rhetoric.*

******



# வள்ளுவம்..!

- மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார்

122

## 9. வள்ளுவ அரசு

வாழ்க்கை பலர்க்கு வணிகம் போல் வது. வருவாயும் செலவும் ஒத்துப்பார்ப்பது பொதுவியல்பு. காரியம் சுணங்கினால், ரூபாய் நூறு இழப்புவரும் எனத் தெளிந்து, தொலையினும் தொலைக என்று ரூபாய் ஐம்பது கையூட்டளிக்க மனம் ஒப்புகின்றது. 'கையூட்டளிப்பது சிறுமை; வினை கெடினும் கெடுக' துணிவதுதான் ஒழுக்கமாயினும், ஒரிருதடவை அங்ஙன் விட்டுக்கொடுக்கலாம். அரசாட்சியின்கண் தொட்ட இடமெல்லாம் பணத்தூக்கமாக இருப்பின், மக்கள் யாது செய்வர்? ஆட்சியின் இயல்பு என்று ஒதுக்கி உலகத்தோடு ஒட்ட ஒழுகுவர்.

இவ்வுண்மையை வள்ளுவர் அறிந்தவர். தூங்காமை - வினைச் சுறுசுறுப்பு - அரசின் ஒழுக்கமெனத் தெளிந்தவர். மெத்தென விரைந்தோடும் கால்வாய் நீரில் அழுக்குத் தேக்கத்துக்கு இடமின்மைபோல், தேங்காது மக்கள் வினையை உடனுக்குடன் முடித்துக் கொடுக்கும் அரசியலில் கையூட்டுக்கு வாய்ப்பில்லை என்று கண்டவர்.

நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு – குறள்.520

என நல்லரசிற்கு அடிப்படை காட்டினார்; ஆதலின் நம் பேற்றால் வள்ளுவத் தோன்றல் இன்று அமைச்சராக இருப்பரேல், நாட்டின்கண் தமக்குரிய அலுவலகங்களை எல்லாம் சென்று சென்று 'தூங்காமை யுண்டேத' எனக் கட்டுக்களைப் புரட்டிப் பார்ப்பார். தூக்கம் கண்டாரேல், முறை பிறழ்ந்தாற்போல் துடிதுடித்து, பின்னும் நீட்டிக்காவாறு அன்றே மக்கட்குக் காரியம் முடித்துக் கொடுப்பர். யாது பொறுப்பினும் பொறுப்பர்; தூங்காது செய்யத் தகும் மக்களின் வேண்டுதாள் கட்டாகத் தூங்குவதைப் பொறார்.

இன்று நம் அமைச்சர்கள் நாட்டினைத் தம் இல்லமாகக் கருதவில்லை. ஊர்சுற்றுங்கால் தம்துறை வினைக்களங்களில் நுழைந்து அமர்ந்து பலவற்றையும் நேரடியாகக் காண்பதில்லை. இங்ஙன் செய்வது நிலைக்கு இழிவெனப் பொய்ம்மானம் நச்சுவர் போலும். மக்களால் தேர்ந்தெடுத்து வந்த குடியரசு மந்திரிகள், 'மடிசெய்து மானம் கருதக் கெடும்' (1028) என்ற குறட் குற்றத்துக்கு ஆளாகாது, நேரடிப் பார்வை செய்ய வேண்டுவல். முன்னறிவிப்பின்றித் தம் வீட்டுக்குச் செல்வது போல, ஊர்தோறும் உள்ள தத்தம் அலுவலகங்கட்குப் போவதை ஓர் அரசியல்பாகக் கொள்ள வேண்டுவல்.

வளரும்...



# தமிழன்னை நான்மணிமாலை

- செம்மொழிக்கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு
சங்க இலக்கிய ஆய்வறிஞர்

**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து" – (குறள் 398)**

"ஒரு பிறவியில் தான் கற்ற கல்வி ஒருவனுக்கு, பின்னர் எழும் பிறவிகளிலும் பாதுகாப்பாக அமையும்" என்பது வள்ளுவர் கூறும் கல்வியின் பெருமை. உலகின் எந்தச் செல்வத்தை விடவும் கல்வியே அருமை. கற்றலில் கிட்டும் இன்பம்போல் வேறு உயர்ந்த இன்பம் உலகில் இல்லை. கல்லாதவர்களுக்குத் தொடர்ந்து வெவ்வேறு வடிவங்களில் வந்து கொண்டே இருக்கும் தொல்லை.

கற்பதைப் பிழையின்றிக் கற்றலே சிறந்த வாழ்க்கைக்கு வழிகாட்டும். தெளிவான கல்வியே வாழ்வில் குறுக்கிடும் எத்தகைய துன்பங்களையும் நீக்கிப் புதிய வண்ணங்களைத் தீட்டும். கற்றுக்கொண்டே இருப்பவர் உள்ளத்தால் படிப்படியாக உயர்வார். கற்கச் சோம்பி விழுபவர் காலமெல்லாம் போராடி அயர்வார்.

கற்றுத் தெளிந்து களங்கமின்றி வாழ்பவர்களோடு சேர்ந்து பழகப் பழக எத்துறையிலும் புலமை கூடும். சான்றோர்களை மட்டுமே இவ்வுலகம் மகிழ்ந்து நாடும். "கற்கும் வேளையில் மாணவத் தன்மையோடு மனம் விரும்பிக் கற்பாய். மகத்துவமான வாழ்வைப் பெற்று உலக அரங்கில் நிற்பாய்" என்று அறிவுறுத்திய அன்புத் தமிழன்னைக்கு என் அருந்தமிழ்ப் பாமாலை.

## அகவல்

அளித்தனள் அறிவை அருந்தமிழ் அன்னை
களிப்புற வைத்தாள் கற்றலில் ஆழ்த்தி
அறப்பொருள் நிறைந்த அகப்பொருள் மற்றும்
புறப்பொருள் பலவும் புரிந்திட வைத்தே
ஐயனா ரிதனார் அழகுற இயற்றிய
ஐயந் தீர்க்கும் அரிய வெண்பா
அடங்கிய புறப்பொருள் வெண்பா மாலையில்
இடம்பெறும் திணைகளை இனிதே கற்றுத்
தெளிந்திட வைத்தத் தென்னக விளக்கு
'பளிச்'செனத் துலக்கிப் பாங்குறச் செய்துப்
புறத்திணை அனைத்தும் புரிந்தே உயரிய
திறத்துடன் மண்ணில் திகழ்ந்திடச் செய்தாள்
வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி
நொச்சி உழிஞை தும்பை வாகை
பாடாண் பொதுவியல் கைக்கிளைப் பெருந்திணை
கோடா தியங்கிக் கூர்மையாய்க் கற்றுச்
சூத்திரம் வெண்பா கொளுவும் கற்றதில்
பாத்திறம் மிளிரும் பக்குவம் கண்டேன்
உள்ளொளி தந்தே ஊக்கும்
வள்ளல் அன்னையே வாழ்க வளர்ந்தே

## வெண்பா - 161

வளர்வதும் ஓங்கியே வாழ்வது மாக
உளர்பலர் நாளும் ஒளிர்ந்தும் - கிளர்ந்தும்
அவர்போல் எனையுமே ஆக்கினாள் அன்னை
அவள்தாள் அடைதல் அரிது

## கட்டளைக் கலித்துறை

அரிதாம் எழிலாள் அருளினைப் பெற்றே
அகமகிழ்தல்
பெரிதாம் அருள்போல் பெரும்பொருள் இங்கே
பிறிதுடைத்தோ
சொரிந்தாள் வரங்கள் சுடர்கள் நிறைத்தாள்
சுமையகற்றிப்
புரிந்தாள் நலன்கள் புலர்ந்தேன் உலகில்
புகழுறவே.

## எழுசீர் விருத்தம்

புகழ்போல் இனிது புவியில் உளதோ
பொலிந்தேன் என்னைப் புனரமைத்தே
அகழ்ந்தேன் மனத்தை அறிந்தேன் பலவும்
அடைந்தேன் எல்லை அவளருளால்
திகழ்ந்தேன் சிறந்து தெளிந்த உளத்தால்
தெரிந்தேன் தாழேன் தினையளவும்
மகிழ்ந்தேன் தமிழின் மணத்தால் எனக்குள்
மலர்ந்தேன் எந்தன் மதியொளிர்ந்தே.

134

# புலவர்கள் கேட்கும் வரம்



- புலவர் தி.வே.விஜயலட்சுமி

சங்ககாலத் தமிழிலக்கியத் தொகுதியான எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று பரிபாடல். பொருட் சிறப்பு, நுணுக்கமான கருத்துகளைக் கொண்டமையால் 'ஓங்கு பரிபாடல்' என்றே இந்நூல் சிறப்புப் பெறுகிறது. இசையோடு கலந்து பாடும் அளவில் பாடல்கள் அமைந்துள்ளன. 70 பாடல்கள் அழிந்தது போக மீதம் இருப்பவை 22 பாடல்கள் மட்டுமே. திருமாலைப் பற்றி 6 பாடல்கள், முருகனைப் பற்றி 8 பாடல்கள், வையைப் பற்றி 8 பாடல்கள் பாடப்பட்டுள்ளன. பரிந்து செல்லும் ஓசையையுடையப் பாக்களால் அமைந்த ஒரு வகைச் செய்யுளே பரிபாடலாகும். அதாவது வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் பலவகைப் பாக்களுக்கும் பரிந்து நடையோடும் பண்ணிசைப் பாடல்களைக் கொண்ட நூல்.

## பரிபாடல் தொகுப்பு

இந்நூலில் அமைந்த பாடல்களின் தொகுப்பினை,

"திருமாற்கு இருநான்கு; செவ்வேட்கு முப்பத்
தொரு பாட்டுக் காடுகாட் கொன்று மருவினிய
வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்ய பரிபாடற் திறம்!"

என்ற வெண்பாவின் துணை கொண்டு பாடல்கள். மொத்தம் 70 பாடல்கள் உள்ளன என அறிகிறோம். இவை முழுமையாகக் கிடைக்கவில்லை.

## பதிப்பு வரலாறு

சுவடிகளில் எழுதப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்த இந்நூல் பிற்காலத்தில் அழிந்து போகும் நிலை எய்தியபோது, பல சுவடிகளைச் சேர்த்து டாக்டர். உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் பரிமேலழகர் உரையுடன் 1918ஆம் ஆண்டு பதிப்பித்து வெளியிட்டார்.

...வளரும்

11




# ரெக்கார்டு இசை - இசைவட்டு

ஆங்கிலத்தில் *phonograph record (அல்லது gramophone record)* என அழைக்கப்படும் ரெக்கார்டு இசைக்கருவி தமிழ் மக்களின் சூழலிலும் பரவத் தொடங்கியது 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் எனலாம். 1857ஆம் ஆண்டில் *Edouard-Leon Scott de Martinville* என்ற பிரெஞ்சுக்காரர் *phonautograph* என்ற இதன் ஆரம்ப வடிவத்தைக் கண்டுபிடித்தார்.



NEW GRAMOPHONE RECORDS.

JANUARY, 1912.

The Gramophone Co., Ltd., Calcutta.

Tamil Records Double Sided.

TEN INCH $ 1-80 or Rs 3—0—0

SPECIAL RECORDS.

W. சதாசிவம்.

8—12202
8—12201
8—12209
8—12204
8—12213
8—12211
8—12208
8—12215
8—12218
8—3217

M. KARTHEGASU.

8—12214

8—12215
8—12216
8—12210

Apply for Main Catalogue for other records.

Please apply to:—

Mr. C. CANDIAH PILLAI,
Proprietor
KLANG PRINTING WORKS
38, Rembau Street,
KLANG, F. M. S.


All Outstation orders are executed by C. O. D. Post

1877இல் அமெரிக்கரான தோமஸ் எடிசன் வட்டுகளில் சேர்க்கப்படும் வகையில் முதல் *phonograph* கருவியைக் கண்டுபிடிக்கின்றார். பின்னர் படிப்படியாக இதன் தொழில்நுட்பம் மேம்பாடு காணத் தொடங்கியது. 1880இல் ஜெர்மானியரான *Emile Berliner* என்பவர் பொதுமக்களின் பயன்பாட்டிற்கான இசைவட்டுக்களைக் கண்டுபிடிக்கின்றார். அதன் பின்னர் பெர்லினர் தனது வணிகக்கூட்டாளியான அமெரிக்கரான ஜோன்சனுடன் இணைந்து கேம்டன் நியூ ஜெர்சி அமெரிக்காவில் 1901இல் விக்டர் டால்கிங் மெஷின் கம்பெனியைத் தொடங்கி அது உலகப் பிரபலம் அடைகின்றது.

அமெரிக்கப் பயன்பாட்டில் பெரும்பாலும் *phonograph record* என்றும் இங்கிலாந்தில் *gramophone record* என்றும் இது அழைக்கப்பட்டது. அதன் பின்னர் *gramophone record* எனும் இசைவட்டு 1910 வாக்கில் மக்கள் புழக்கத்திற்கு வரத்தொடங்குகிறது.

பொதுவாக இசைவட்டின் சுற்றளவை வைத்து இது குறிப்பிடப்படும். உதாரணமாக 12, 10, 7 அங்குலத்தில் இவை தயாரிக்கப்பட்டன. என்ன ஆச்சரியம் என்றால் மேற்கத்திய உலகில் அறிமுகமாகும் இந்த க்ராமஃபோன் இசைவட்டுக்கருவி அதே 1912 வாக்கில் மலாயாவிலும் தமிழ் மக்களின் பொழுது போக்கு சாதனமாகப் புழக்கத்தில் வந்தது என்பதுதான்.

1912ஆம் ஆண்டு ஏப்ரல் மாத வாரப் பத்திரிகையான பினாங்கு ஞானாசாரியன் பத்திரிகையில் இடம்பெறுகின்ற ஒரு விளம்பரம் இதற்குச் சான்றாகின்றது.



புகைப்படத்தில்
*- Emile Berliner with disc record gramophone*

இந்த விளம்பரத்தில் 1912 வாக்கில் தமிழிசை அல்லது உரைகளைக் கொண்ட இசைவட்டுக்களின் தகவல்கள் சில நமக்கு இப்பத்திரிகையின் வழி கிடைக்கின்றன. அவற்றுள் சில:

* இன்னும் என்மீதில் (கதிரையாத்திரை விளக்கம் - பண்: நாதனாமக்கிரியை - தாளம்: ரூபகம்.
* மயினமிசைவரும் - பண்: தன்னியாசி - தாளம்: ஆதி
* அங்கிங்கெனாதபடி - தாயுமானவர்
* தாயைவிட்டு: அரிச்சந்திரநாடகம் - மயான காண்டம்
* பரமேஸ்வரி - ராகம்: கல்யாணி
* சண்டாளன் - ராகம்: ஆனந்தபைரவி
* எக்காலத்திலும் மறவேனே - ராகம்: நாட்டைக்குறிஞ்சி - தாளம்: ஆதி
* நான் படும்பாடு (அருட்பா) - ராகம்: பைரவி

மலாயாவின் கிள்ளான் நகரில் 38 ரெம்பாவ் சாலையில் அமைந்திருந்த கிள்ளான் அச்சு ஆலையில் திரு சி.கந்தையா பிள்ளை என்பவரது கடையில் இவை விற்கப்பட்டன என்ற தகவலும் இந்த விளம்பரத்தில் அடங்குகிறது.

மலாயா வாழ் தமிழ் மக்களின் இசை ஆர்வத்திற்கும் பொழுதுபோக்கிற்கும் தமிழ் இசைவட்டுக்கள் உருவாக்கப்பட்டு 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புழக்கத்தில் இருந்தன என்பதும், தமிழ்நாட்டிலிருந்து அவை மலாயாவிற்குத் தருவிக்கப்பட்டு விற்பனை நிகழ்ந்திருக்கின்றது என்பதையும் பினாங்கு ஞானாசாரியன் பத்திரிகையின் வழி நாம் அறிகின்றோம்.

[குறிப்பு: இப்பத்திரிகைச் செய்தி இக்கட்டுரை ஆசிரியரால் பிரித்தானிய நூலகத்தின் "இந்தியா அலுவலகம்" பகுதியில் உள்ள ஆவணப் பாதுகாப்புப் பகுதியிலிருந்து 11.03.2025 அன்று மின்னாக்கம் செய்யப்பட்டது]

******




உலகத்தமிழ் மின்னிதழின் 286ஆவது இதழ் 28.05.2025 அன்று மலரக் கண்டேன்... மகிழ்ச்சி கொண்டேன். முகப்போவியம் சிறப்பாக இடம் பெற்றிருக்கிறது.

முதல் பகுதியான கொள்கை விளக்கக் குறிப்புப் பகுதியில் குறள் பரிசுக்காக ரூபாய் 15,000/- வழங்கப்படும் செய்தி சிறப்பான செய்தியாகப் பார்க்கிறேன்.

கடந்த வாரத்தைப் போல இந்த வாரமும் திருக்குறள் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் விதமான இந்தப் போட்டிகளின் விவரம் சிறப்பாக இடம் பெற்றிருக்கிறது.

அடுத்த பகுதியாக நூலேணி பகுதியும் இடம்பெற்றிருக்கிறது. அதனைத் தொடர்ந்து மகாகவி பாரதியின் கவிதையும் பாவேந்தர் பாரதிதாசனின் கவிதையும் தமிழெழுச்சி என்ற பகுதியில் வழக்கம் போல வெளியாகி இருக்கிறது.

ஆசிரியம் பகுதியில் இதழ் வெளியான 28ஆம் நாள்,மே மாதம் பிறந்த இசை வித்தகர் குடந்தை ப.சுந்தரேசனார் பற்றிப் பல குறிப்புகள் இடம்பெற்று இருக்கின்றன. புதியதாக ஒரு இசை மேதையைப் பற்றி நாம் அறிந்து கொள்ள இப்பகுதி பேருதவியாக இருந்தது. பொருநராற்றுப்படையில் முடத்தாமக்கண்ணியார் இசை பற்றிய எழுதிய ஒரு பாடலைக் குறிப்பிட்டு இந்த இசை வித்தகர் குடந்தை ப.சுந்தரேசனாரின் குறிப்புகளை நாம்... அவரைப் பற்றித் தெரிந்து கொள்ள பேருதவியாக இருந்தது.

அவ்வப்போது பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அளப்பரிய தமிழ்ப் பணிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "எங்கும் தமிழ்... எதிலும் தமிழ்..." என்பதைத் தாண்டி "எப்பொழுதும் தமிழ்... எங்கெங்கும் தமிழ்" என்ற வண்ணம் மாண்புமிகு நமது முதலமைச்சர் தமிழ் வளர்ச்சிக்கான பணிகளை முன்னெடுத்து வருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அவரது இத்தகைய முன்னெடுப்பின் காரணமாக தமிழ் வளர்ச்சித் துறை தனது பணிகளை இன்னும் இன்னும் வேகப்படுத்தி இருக்கிறது என்பதும் உண்மை. வழக்கம் போல இடம்பெறும் தேன் துளி பகுதியும் இந்த வாரம் இடம்பெற்றிருக்கிறது.

முதலாம் துளியில் பணி நிறைவு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அலுவலர் திரு.த. பிச்சாண்டி எழுதிய நூலின் முக்கிய குறிப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. இரண்டாம் துளியில் மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் வாழ்வியல் முன்னேற்ற நெறிகள் பற்றிய குறிப்பு இடம்பெற்றிருக்கின்றன.

கட்டுரைகளைப் பொறுத்த அளவில் உரைவேந்தர் ஔவை துரைசாமியின் சேர மன்னர் வரலாறு, மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் வள்ளுவம் ஆகிய பகுதிகள் நல்ல கருத்துகளை உள்ளடக்கியுள்ளன.

செம்மொழிக் கவிஞர் மெய்ஞானி பிரபாகர பாபு எழுதி வரும் தமிழன்னை நான்மணிமாலையும் நல்ல கவித்துவமான நடையில் இருக்கிறது.

நற்றிணை - ஆங்கிலம் இரு மொழிகளில் இடம்பெறுவது சிறப்புதான்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அடியொற்றி குழந்தை இலக்கியங்களைப் படைத்து வரும் மூத்த கவிஞர்களைக் குழந்தைக் கவிஞரின் பரம்பரையாக முனைவர் தேவி நாச்சியப்பன் நமக்குத் தந்து வருகிறார். அந்த வகையில் இந்த வாரம் மலையமான் என்ற புனைப்பெயரில் எழுதி வரும் முனைவர் நா. இராசா கோபாலன் பற்றிச் சில குறிப்புகளை நமக்குத் தந்திருக்கிறார்.

மலையமான் என்ற புனைப்பெயரில் எழுதி வரும் இவர் 90க்கும் மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார் என்பது நம்மைப் பிரமிக்க வைக்கிறது. குறிப்பாக அறிவியல் நூல்கள், அறிவியல் சிறுகதைகள் இன்னும் நகைச்சுவை நூல்கள் என்று பலதரப்பட்ட நூல்களை இவர் எழுதியிருக்கிறார் என்பதும் போற்றத்தக்கது.

இவரது நூல் தமிழ்நாடு அரசின் சிறந்த நூலுக்கான விருது பெற்றிருப்பதும் மகிழ்ச்சிக்குரியது. அதைத் தாண்டி இன்னும் பல விருதுகளையும் இவர் பெற்றிருக்கிறார். மொழிபெயர்ப்பாளர் என்பதும் இவருக்கான கூடுதல் சிறப்பாகும். மைலயமான் எழுதிய ‘குருவியே வா...’ என்ற பாடல் இந்த இதழில் இடம்பெற்றிருக்கிறது. இந்தப் பாடலில்... "செழித்த நெல்போல் மூக்குடனே"... என்கின்ற வரி அற்புதமாக உள்ளது. குருவியின் மூக்கை, செழித்த நெல் மணிக்கு ஒப்பிடுகிறார். வித்தியாசமான கற்பனை... அபாரமான ஒப்புமை... பாராட்டுகள். இன்னும் இந்தப் பாடலில் இந்தக் குருவிகள்... "வள்ளி யப்பா தேடுவதற்கு / விண்ணில் பறந்து மறைந்தாயோ"... எனக் குறிப்பிடும் இடத்தில் நம்மை நெகிழ்ச்சிக்குள்ளாக்குகிறார். அருமையான எழுத்தாளருக்கு நம்முடைய வாழ்த்துகள்.

இந்த வாரம் கல்வி என்பது பெருங்கடல் என்கின்ற பகுதியில் பேராசிரியர் செ.இரா. செல்வகுமார் அவர்களின் கருத்து கடந்த 14.05.2025 அன்று வெளியான 284ஆவது இதழின் மறுபதிப்பு என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அறிவோம்-09 பகுதியில் 1988-ஆம் ஆண்டு வரையிலான தலைமைச் செயலாளர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.பாராட்டுகள்.

எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே... என்கின்ற பகுதியில் பாவலர் இறையரசன் அவர்களின் தொடர் கவிதை போற்றுதலுக்குரியது.

பொருள்களின் இணையப் பயன்பாடுகள்... பற்றி வாரம் தோறும் எழுதி வரும் முனைவர் சண்முகம் அவர்களின் பதிவு இடம்பெறவில்லை இந்த வாரம்.

அதுபோல வாரந்தோறும் ஏதேனும் ஒரு செய்தியோடு சிறந்ததொரு ஒளிப்படம் வெளியிடப்பட்டு வரும் செய்தி வெளியீடு என்கின்ற பகுதியும் இந்த வாரம் இடம்பெறவில்லை.

நிறைவு பகுதியாக சட்டவியல் அகர முதலியும் ஐயா தமிழறிஞர் ஔவை நடராசன் அவர்களுக்கான புகழ் வணக்கமும் இடம்பெற்றிருக்கின்றன.

நன்றி.



கவிஞர் பேரா, திருநெல்வேலி.




28.05.2025 உலகத்தமிழ் 286, 1330 குறள்களையும் ஒப்பித்தல் செய்யும் மாணவர்களுக்கு 2022 - 23ஆம் ஆண்டு முதல் பரிசுத்தொகை ரூபாய் 15000- ஆக உயர்த்தப்பட்டதும் இப்பரிசு தொடங்கப்பெற்ற 24 ஆண்டுகளில் 920 மாணவர்கள் பரிசு பெற்றதும் கொள்கை விளக்கக் குறிப்பில் இருந்து அறிந்து மகிழ்கிறேன்.

28.05.1914இல் சீர்காழியில் பிறந்த ப.சுந்தரேசனார் சிலப்பதிகாரம், தேவாரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம், பெரிய புராணம் போன்ற நூல்களில் பொதிந்துள்ள இசைக் குறிப்புகளை ஆராய்ந்து வெளிக்கொணர்ந்து தமிழ்ப் பண்ணிசைக்குப் பெருமை சேர்த்தவர் என ஆசிரியம் பகுதிக் கட்டுரை கூறுகிறது. இவர் பிறந்தநாளில் இவரது தமிழிசைப் பணியினை எண்ணிப் பெருமை கொள்வோம் என்கிறார் ஆசிரியர். பலரும் அறியாத ஒரு பெரியாரை நினைக்கச் செய்த ஆசிரியர் அவர்களுக்கு நன்றி.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வகுத்தளித்த தமிழ் வளர்ச்சித் திட்டங்கள் தமிழ் வளர்ச்சித் துறை, மொழிபெயர்ப்புத் துறை, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், உலகத் தமிழ்ச் சங்கம், தமிழ்ப் பல்கலைக்கழகம் வாயிலாக நிறைவேற்றி வருவதை அவ்வப்போது பகுதியில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

தேன் துளி 1 உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையில் அமைய எம்.ஜி.ஆர் அவர்கள் ஏற்பாடு செய்தது பற்றிய விவரங்கள். காயப்படாத சூரியன் களங்கமில்லாத ஓமந்தூரார் பற்றி ஆழங்கண்ட ஆளுமையர் பகுதியில் ஔவை நடராசன் ஐயா அவர்கள் எழுதியுள்ளார்.

பேராசிரியர் திரு செ.இரா.செல்வகுமார் அவர்கள், ஒரு நாட்டின் மொத்த மதிப்பைக் கணக்கிடுவது கடினம் எனவும் தமிழ்நாட்டிலுள்ள 16 நகரங்களின் நில மதிப்பு 31 கோடியே கோடி உருபாய் எனவும் எழுதியுள்ளார்.

வள்ளுவ அரசு - வ.சுப.மாணிக்கனார் அவர்கள், தேர்தல் காலத்தில் மட்டுமே

இந்தியக் குடியரசில் மக்கள் மதிக்கப்படுகிறார்கள்; பிற காலங்களில் நாள்தோறும் இகழப்படுகிறார்கள்; ஓர் அதிகாரியைப் பார்க்க வேண்டுமென்றால் கையூட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது என வருந்தி உண்மை நிலையைக் காட்டுகிறார்.

புலவர் திருமதி தி.வே.விஜயலட்சுமி அவர்கள் 'செவிச்சொல்லும்' எனத் தொடங்கும் குறள் 694 வழி நாடாள்வார், அதிகாரிகள், ஆசிரியர், ஆண்டவன் என அனைவரிடமும் பழகும் பண்பாடு குறித்த விளக்கம் தருகிறார்.

முனைவர் திருமதி க.சுபாஷிணி வழங்கும் 1898இல் பினாங்கில் கல்வி எனும் கட்டுரையில் ஆங்கிலேய முகம்மதிய பள்ளிக்கூடம் ஆங்கிலம், தமிழ் இருமொழிகளையும் கற்பித்தது; அப்பள்ளியில் மாதக்கட்டணம் முதல், இரண்டாம் வகுப்புகளுக்கு 50 காசு, மூன்றாம் வகுப்புக்கு 75 காசு, நான்காம் வகுப்புக்கு 1 வெள்ளி போன்ற பல தகவல்கள் உள்ளன.

27.11.1940 முதல் தலைமைச் செயலாளர்கள் பட்டியல் சிறப்பு. அதில் முதல் பக்கத்தில் கால வரிசை ஒழுங்கு இல்லை. இரண்டாம் பக்கத்தில் உள்ள தகவல் கால வரிசைப்படி உள்ளது. பாவலர் இறையரசன் அவர்களின் தமிழ்த்தாய் கவிதை அருமை. 31, 32ஆம் பக்கங்களில் சட்டவியல் அகரமுதலி, புகழ் வணக்கம் இடம்பெற்றுள்ளது. மகிழ்ச்சி.



முனைவர் தேவி நாச்சியப்பன்

# தலைமைச் செயலாளர்கள் பட்டியல் விவரம்

| வ.எண் | பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| 26. | திரு.எம்.எம்.இராஜேந்திரன் இ.ஆ.ப., | 06.02.1988 | 18.01.1991 |
| 27. | திரு.டி.வி.ஆன்டனி இ.ஆ.ப., | 19.01.1991 | 25.06.1991 |
| 28. | திரு.டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப., | 26.06.1991 | 31.05.1994 |
| 29. | திரு.என்.ஹரிபாஸ்கர் இ.ஆ.ப., | 31.05.1994 | 27.05.1996 |
| 30. | திரு.ஏ.எஸ்.பத்மநாபன் இ.ஆ.ப., | 27.05.1996 | 06.06.1996 |
| 31. | திரு.கே.ஏ.நம்பியார் இ.ஆ.ப., | 06.06.1996 | 30.06.1998 |
| 32. | திரு.ஏ.பி.முத்துசுவாமி இ.ஆ.ப., | 30.06.1998 | 31.05.2001 |
| 33. | திரு.பி.சங்கர் இ.ஆ.ப., | 01.06.2001 | 06.06.2002 |
| 34. | திரு.சுகவனேஸ்வர் இ.ஆ.ப., | 10.06.2002 | 02.12.2002 |
| 35. | திருமதி லசஷ்மி பிராணேஷ் இ.ஆ.ப., | 02.12.2002 | 31.04.2005 |
| 36. | திரு.என்.நாராயணன் இ.ஆ.ப., | 01.05.2005 | 13.05.2006 |
| 37. | திரு.எல்.கே.திரிபாதி இ.ஆ.ப., | 14.05.2006 | 31.08.2008 |
| 38. | திரு.கே.எஸ்.ஸ்ரீபதி இ.ஆ.ப., | 01.09.2008 | 31.08.2010 |

| வ.எண் | பெயர் | முதல் | வரை |
|---|---|---|---|
| 39. | திருமதி எஸ் மாலதி இ.ஆ.ப., | 01.09.2010 | 16.05.2011 |
| 40. | திரு.தேபேந்திரநாத் சாரங்கி இ.ஆ.ப., | 16.05.2011 | 31.12.2012 |
| 41. | திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் இ.ஆ.ப., | 31.12.2012 | 31.03.2014 |
| 42. | திரு.மோகன் வர்கீஸ் சுங்கத் இ.ஆ.ப., | 01.04.2014 | 02.12.2014 |
| 43. | திரு.கு.ஞானதேசிகன் இ.ஆ.ப., | 02.12.2024 | 08.06.2016 |
| 44. | முனைவர் பா.இராம மோகனராவ் இ.ஆ.ப., | 09.06.2016 | 22.12.2016 |
| 45. | முனைவர் (திருமதி) கிரிஜா வைத்தியநாதன் இ.ஆ.ப., | 23.12.2016 | 30.06.2019 |
| 46. | திரு.க.சண்முகம் இ.ஆ.ப., | 30.06.2019 | 31.01.2021 |
| 47. | முனைவர் ராஜீவ் ரஞ்சன் இ.ஆ.ப., | 01.02.2021 | 07.05.2021 |
| 48. | முனைவர் வெ.இறையன்பு இ.ஆ.ப., | 07.05.2021 | 30.06.2023 |
| 49. | திரு.சிவ் தாஸ் மீனா இ.ஆ.ப., | 30.06.2023 | 19.08.2024 |
| 50. | திரு.நா.முருகானந்தம் இ.ஆ.ப., | 19.08.2024 | - |

49

# பொருள்களின் இணையப் பயன்பாடுகள்



- முனைவர் க.சண்முகம், சென்னை

## சைபர் பாதுகாப்பும் குறுஞ்செயலிகளும்




நமது முகநூல் கணக்கு, வாட்ஸ்அப், வங்கிக் கணக்கு, இணைய அமைப்பு என அனைத்தையும் முதலில் பின்தொடர்ந்து கண்காணித்து, அதிலுள்ள பலவீன வழியைக் கண்டுபிடித்து அதன் பிறகு தாக்குதல் நடத்தப்படுகிறது. இதுபோன்ற செயல்பாடுகளை அவர்கள் சைபர் தாக்குதல் (அ) இணையத் தாக்குதல் (Cyber attack) மற்றும் இணைய அச்சுறுத்தல்கள் (Cyber threats) முறையில் மேற்கொள்வார்கள்.

நாம் எதிர்பாராமல், திட்டமிட்டு திடீரென தாக்குதல் நடத்தி நம்முடைய சாதனங்களையும் இணைய வலை அமைப்பையும் நிலைகுலையச் செய்து விடுவார்கள். இணைய அச்சுறுத்தல்கள் என்பது நம்முடைய அலைபேசி சாதனங்களில், வலையமைப்புகளில் உட்புகுந்து எந்தவிதமான மாற்றங்களையும் செய்யாமல், நம்முடைய செயல்பாடுகள் எல்லாம் கண்காணித்து அதில் இருந்து தகவல்களைப் பெற்று நம்மை அச்சுறுத்த முயல்வதை *Malicious attempts* என்று சொல்வார்கள்.

**மேலும் தனிநபர் எவ்வாறு இணைய அச்சுறுத்தல்களில் இருந்து தற்காத்துக் கொள்வது என்பதைப் பார்ப்போம்.**


1. இணைய அச்சுறுத்தல்களில் இருந்து நாம் நம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்றால் நம்முடைய தரவுகளை ஒரு போதும் அங்கீகரிக்கப்படாத நபர்களிடமோ, முகநூலிலோ, வலைத்தளத்திலோ பகிராதீர்கள். நாம் பகிர கூடிய தகவலில் இருந்து தான் தகவலை எடுத்துக்கொண்டு நம்மை ஏமாற்றுகிறார்கள்; மிரட்டுகிறார்கள். உங்களுக்கு யாரேனும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தினால் பயப்படாமல் அதை எதிர்கொண்டு சைபர் கிரைம் உதவி எண் 1930 அல்லது தேசிய உதவி எண்ணான 155260 எண்ணைத் தொடர்பு கொண்டு தகவலைத் தெரிவிக்க வேண்டும். முகநூல், இன்ஸ்டாகிராம் என அனைத்திலும் கொடுக்கப்பட்டுள்ள




பாதுகாப்பு அம்சங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

சென்டினல் ஒன் சிங்குலாரிட்டி இயங்குதளம் மிகவும் பாதுகாப்பான ஒன்று. இதை நாம் நிறுவனங்களில் பயன்படுத்தலாம். நெட்வொர்க்கில் இணைந்துள்ள கணினியில் சமரசம் செய்து கொண்ட கணினியை எளிதில் நம்மால் விலக்கி வைக்க முடியும். ஒவ்வொரு 39 விநாடிகளுக்கு ஒரு முறை இணையத் தாக்குதல் நடைபெறுகிறது. எனவே, நம்மைக் காக்கும் காலம் போய்... இன்று நம்முடைய வலைப்பக்கமான முகநூல், இன்ஸ்டாகிராம் போன்றவற்றையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்வது நம் கடமையாக உள்ளது. எனவே அங்கீகரிக்கப்படாத தரவுகளைப் பகிராதீர். தேவையற்ற இணைப்புகளைச் சொடுக்காதீர். இணையம் இன்பமாகும்.

**********








**பாவலர் கருமலைத் தமிழாழன்**

மயில்பொறியை வானத்தில் பறக்க வைத்தோம்
மணிபல்லவத் தீவிற்குப் பறந்து சென்றோம்
குயில்மொழியாம் கண்ணகியை அழைத்துச் செல்லக்
குன்றுக்கு வானவூர்தி வந்த தென்றே
உயில்போன்று நம்முன்னோர் எழுதி வைத்த
உண்மைகளை அறிவியலின் அற்பு தத்தைப்
பயில்கின்ற காப்பியத்தில் படித்த தெல்லாம்
பார்தன்னில் நனவாகக் காணு கின்றோம்!

அணுப்பிளந்த செய்தியினை ஔவை சொன்னாள்
அவிழ்த்துவிட்ட புளுகுமூட்டை என்று ரைத்தார்
அணுக்குண்டைப் பொக்ரானில் வெடித்த போதோ
அருந்தமிழன் அறிவுதனைப் போற்றி நின்றார்
முணுமுணுத்தார் அம்புமுனை நெருப்பைக் கக்கி
முன்னேறிச் சென்றதனைப் பொய்யே யென்றார்
முணுமுணுத்த வாய்பிளந்தே இசுகட் என்று
முகிழ்த்த, ஏவு கணைகண்டு வியப்பி லாழ்ந்தார்!

...வளரும்

# செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண் : 1217 நாள் : 03.06.2025

**<u>செய்தி வெளியீடு</u>**

**தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுதந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜுன் 3–ஆம் நாள் "செம்மொழிநாள் விழா"–வில் 2025–ஆம் ஆண்டுக்கான கலைஞர் செம்மொழித்தமிழ் விருது, செம்மொழி நாள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 5 பேருக்கு உயர்த்தப்பட்ட உதவித் தொகைக்கான ஆணைகள் வழங்கி – தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனை மலர் மற்றும் – செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட 2 நூல்கள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (3.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான செம்மொழிநாள் விழாவில், 2025–ஆம் ஆண்டுக்கான கலைஞர் செம்மொழித்தமிழ் விருது, செம்மொழி நாள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 5 பேருக்கு உயர்த்தப்பட்ட உதவித் தொகை ஆணைகளை வழங்கி, தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனை மலரினையும், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட தமிழ் வினையடிகள் – வரலாற்று மொழியியல் ஆய்வு மற்றும் சங்க இலக்கியச் சொல்வளம் ஆகிய நூல்களையும் வெளியிட்டார்.

தொன்மை, தனித்தன்மை, பொதுமைப்பண்பு, நடுவுநிலைமை, பலமொழிகளுக்குத் தாய், பட்டறிவு வெளிப்பாடு, பிறமொழித் தாக்கமின்மை, இலக்கிய வளம், உயர் சிந்தனை, கலை, இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு–பங்களிப்பு, மொழிக்கோட்பாடு ஆகிய தகுதிப்பாடுகளைக் கொண்ட தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுதந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமையைப் போற்றிடும் வகையில் அவர் பிறந்த நாளான ஜுன் திங்கள் 3ஆம் நாள் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் ஆண்டுதோறும் செம்மொழிநாள் விழாவாகக் கொண்டாடப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பின்படி, இன்று (3.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான இன்று "செம்மொழி நாள்

விழா" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இன்றையதினம் நடைபெற்றது.

இவ்விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்மொழி உருவாக்கம், தொல்லியல் சான்றுகள், செம்மொழித் தகுதி, 1815 முதல் 1950 வரை வெளிவந்த செவ்வியல் நூல்கள் 2021 முதல் 2025 வரை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், தமிழ் வளர்ச்சித் துறையால் வெளியிடப்பட்ட நூல்கள், தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் உருவாக்கப்பட்ட கலைஞர் கருவூலம் மற்றும் ஒளிப்படங்கள் கொண்டு கலைவாணர் அரங்கத்தில் அமைக்கப்பட்ட கண்காட்சியைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, **"முத்தமிழறிஞரின் முத்தமிழ்"** இசை மற்றும் நாட்டிய நிகழ்ச்சியும், **"எல்லோர்க்கும் எல்லாமுமாய்"** என்ற தலைப்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறித்த ஆவணப்படமும், செய்தித்துறையால் உருவாக்கப்பட்ட **"செம்மொழி நாள்"** குறித்த குறும்படமும் திரையிடப்பட்டன.

**கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முனைவர் தாயம்மாள் அறவாணன் அவர்களுக்கு, 2025–ஆம் ஆண்டுக்கான கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதினையும், விருதுத் தொகையாக 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவச் சிலையும் வழங்கி சிறப்பித்தார்.

முனைவர் தாயம்மாள் அறவாணன் அவர்கள் 23.05.1944–இல் கன்னியாகுமரி சேந்தன்புதூர் என்ற ஊரில் பிறந்தவர். சுசீந்திரம் பள்ளியில் பள்ளிக்கல்வி பயின்றவர். தென்திருவிதாங்கூர் இந்துக் கல்லூரியில் புகுமுக வகுப்பில் சேர்ந்து, அதே கல்லூரியில் தமிழில் இளங்கலைப் பட்டமும், கேரளப் பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலைப் பட்டமும் பெற்றவர். 'குழந்தை இலக்கியம் – ஒரு பகுப்பாய்வு' தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டத்தைப் பெற்ற சிறப்புக்குரியவர்.

**செம்மொழிநாள் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள்**

**பள்ளி மாணவர்களுக்கான போட்டிகள்**

செம்மொழி நாளையொட்டி, தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக பள்ளி மாணவர்களுக்கு மாநில அளவில் நடத்தப்பெற்ற **பேச்சுப் போட்டியில்** முதல் பரிசு

பெற்ற திண்டுக்கல் மாவட்டம், புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி 11–ஆம் வகுப்பு மாணவன் சா. முஹம்மது அர்ஷத்துக்கு 15,000/– ரூபாயும், இரண்டாம் பரிசு பெற்ற விழுப்புரம் மாவட்டம், பெரியதச்சூர் அரசு மேல்நிலைப்பள்ளி 11–ஆம் வகுப்பு மாணவி பா. தமிழரசிக்கு 10,000/– ரூபாயும், மூன்றாம் பரிசு பெற்ற தருமபுரி மாவட்டம், அரசு மாதிரிப்பள்ளி 11–ஆம் வகுப்பு மாணவி மு.கோகிலாவுக்கு 7,000/– ரூபாயும்;

**கட்டுரைப் போட்டியில்** முதல் பரிசு பெற்ற மதுரை மாவட்டம், பாரதியார் பதின்ம மேல்நிலைப் பள்ளி 11–ஆம் வகுப்பு மாணவன் செ. அழகுபாண்டிக்கு 15,000/– ரூபாயும், இரண்டாம் பரிசு பெற்ற கோயம்புத்தூர் மாவட்டம், விசயலெட்சுமி பதின்ம மேல்நிலைப் பள்ளியில் 11–ஆம் வகுப்பு மாணவன் ர. தரணீஷ்க்கு 10,000/– ரூபாயும், மூன்றாம் பரிசு பெற்ற தஞ்சாவூர் மாவட்டம், ஸ்ரீ சரஸ்வதி பாடசாலை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 10–ஆம் வகுப்பு மாணவி பி. கீர்த்தனாவுக்கு மூன்றாம் பரிசாக 7,000/– ரூபாயும்;

<u>கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள்</u>

கல்லூரி மாணாக்கர்களுக்கு மாநில அளவில் நடத்தப்பெற்ற **பேச்சுப் போட்டியில்** முதல் பரிசு பெற்ற கன்னியாகுமரி மாவட்டம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவி நா.சீ. நந்தனாவுக்கு 15,000/– ரூபாயும், இரண்டாம் பரிசு பெற்ற தருமபுரி மாவட்டம், வருவான் வடிவேலன் கல்வியியல் கல்லூரி மாணவர் த. தங்கமுத்துக்கு 10,000/– ரூபாயும், மூன்றாம் பரிசு பெற்ற புதுக்கோட்டை மாவட்டம், கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக் கல்லூரி மாணவி வீ. ஜெயலட்சுமிக்கு ரூ.7,000/– ரூபாயும்;

**கட்டுரைப் போட்டியில்** முதல் பரிசு பெற்ற திண்டுக்கல் மாவட்டம், ஜி.டி.என். கலைக் கல்லூரி மாணவர் க. விஜயகாந்த்துக்கு 15,000/–ரூபாயும், இரண்டாம் பரிசு பெற்ற தென்காசி மாவட்டம், ஸ்டெல்லா மேரீஸ் கல்வியியல் கல்லூரி மாணவி இல. இலக்கியாவுக்கு 10,000/– ரூபாயும், மூன்றாம் பரிசு பெற்ற திருநெல்வேலி மாவட்டம், யுனிவர்ஸ் கல்வியியல் கல்லூரி மாணவி அ. பிரியதர்ஷினிக்கு 7,000/– ரூபாயும், பாராட்டுச் சான்றிதழுடன் வழங்கப்பட்டன.

<u>அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகை உயர்த்தப்பட்டதற்கான அரசாணை</u>

தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக தற்போது மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை தமிழறிஞர்களுக்கு ரூ.4,500/-லிருந்து ரூ.7,500/-ஆகவும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ரூ.3,500/-லிருந்து ரூ.7,500/-ஆகவும், எல்லைக்காவலர்களுக்கு ரூ.5,500/-லிருந்து ரூ.7,500/-ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என 2025-2026ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தற்போது உதவித்தொகை பெற்று வரும் தமிழறிஞர்கள் 217 பேருக்கும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 621 பேருக்கும், எல்லைக்காவலர்கள் 60 பேர் என மொத்தம் 898 பேருக்கும் உயர்த்தப்பட்ட வீதத்தில் உதவித்தொகை பெற ஒரு ஆண்டிற்கு ரூ.3,90,60,000/- தொடர் செலவினமாக நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம், திரு. ம. சக்கரவர்த்தி, திரு. இரா. மோகனசுந்தரம், திருமதி ப. பானுமதி (எ) ஆதிரா முல்லை, திரு. அ. இதயகீதம் இராமானுஜம், திருமதி ந. சுந்தரி ஆகிய அகவை முதிந்த தமிழறிஞர்கள் 5 பேருக்கு உயர்த்தப்பட்ட உதவித்தொகைக்கான ஒப்பளிப்பு அரசாணையினை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை வாயிலாக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனை மலரினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட 2 நூல்களை வெளியிடுதல்**

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட திரு. இராசேந்திரன் சங்கரவேலாயுதன் அவர்கள் எழுதிய "தமிழ் வினையடிகள் - வரலாற்று மொழியியல் ஆய்வு" மற்றும் திரு. பா.ரா. சுப்பிரமணியன் அவர்கள் எழுதிய "சங்க இலக்கியச் சொல்வளம்" ஆகிய நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

மேலும், சொல்லின் செல்வர் திரு. சுகி சிவம் அவர்கள் தலைமையில் **செம்மொழியின் தனிச்சிறப்பு "அதன் தொன்மையே!" "அதன் இளமையே!"** என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. பட்டிமன்றத்தில் புலவர் இரெ. சண்முகவடிவேலு, புலவர் மா. இராமலிங்கம், திரு. கவிதா ஜவகர், பேராசிரியர் பர்வீன் சுல்தானா ஆகியோர் உரையாற்றினர்.

இவ்விழாவில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர் பாபு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. வைகோ, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.தொல். திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. இரா. முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் திரு. கே.எம். காதர் மொகிதீன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. ஆ. ராசா, திரு. தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி, துணை மேயர் திரு. மு. மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.வே. ராஜாராமன், இ.ஆ.ப., கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி கவிதா ராமு இ.ஆ.ப., செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு. பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு. துறைமுகம் காஜா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (3.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான செம்மொழிநாள் விழாவில், பல்வேறு கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. கே.என்.நேரு, திரு. இ. பெரியசாமி, திரு. எ.வ.வேலு, திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், திரு. பெரியகருப்பன், திரு. மு.பெ. சாமிநாதன் உள்ளிட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. வைகோ, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.தொல். திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. இரா. முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் திரு. கே.எம். காதர் மொகிதீன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.வே. ராஜாராமன், இ.ஆ.ப., கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி கவிதா ராமு இ.ஆ.ப., செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வாரியத் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (3.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான செம்மொழிநாள் விழாவில், தமிழ்ச் செம்மொழி குறித்த கண்காட்சியினைப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (3.6.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான செம்மொழிநாள் விழாவில், முனைவர் தாயம்மாள் அறவாணன் அவர்களுக்கு, 2025–ஆம் ஆண்டுக்கான கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதினையும், விருதுத் தொகையாக 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையும், கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவச் சிலையும் வழங்கினார். உடன், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர் பாபு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.வே. ராஜாராமன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உள்ளனர்.

**English - Tamil Legal Glossary**

**Dr.Marco A.Fiola**
**Department of Languages , Literatures and Cultures, Ryerson Law Research Centre, Ryerson University**

*871) Dying without having made a valid will*

*intestate* - உயில் எழுதாமல் இறந்துவிடுபவர்



*872) Directions made in legal form where a person instructs how his or her estate should be administered and distributed after death. It takes effect upon a person's death*

*Will* - உயில், விருப்பாவணம்

*873) A defence available in strict liability offences that allows the accused to prove on a balance of probabilities that it was not negligence*

*due diligence* - உரிய அவதானம்

*874) A common law administrative law doctrine that requires a person exercising statutory (or potentially royal prerogative) power to give some form of notice of a pending decision to a person owed the fairness; an opportunity for that person to comment; and the requirement that the official making the decision be sufficiently unbiased*

*procedural fairness* - உரிய நடைமுறை

*875) In a case under the Divorce Act, claims and orders for custody and access, child support and spousal support*

*corollary relief* - உரிய நிவாரணம்

*876) FOSS is an electronic system that keeps a record on every Canadian immigration and visa application made within Canada at the port of entry*

*Field Operating Support System (FOSS)* - உள்நாட்டு குடிவரவு பதிவுமுறை

*877) Latin for "in fact." Often used in place of "actual" to show that the court will treat as a fact authority being exercised or an entity acting as if it had authority, even though the legal requirements have not been met*

*de facto* - உள்ளபடியான

*878) Latin term for a warning. Cautionary words*

*caveat* - எச்சரிக்கை முன்னறிவிப்பு

*879) An action brought by the defendant in an existing action against the plaintiff, which is usually tried with the plaintiff's claim*

*counterclaim* - எதிர்க் கோரிக்கை

*880) A statement made by a defendant in a civil proceeding to respond to a plaintiff's claim*

*statement of defence* - எதிர்த்தரப்பு கூற்று

*****



# புகழ் வணக்கம்

128

| | |
|---|---|
| 806 | Condolences to you and your family sir for demise of your great Dad.<br>Kl andy |
| 807 | Unbearable to me, my son. Karthikai Somavaram At the feet of Nataraja Silver Tongue of Tamil We are all Tears. Bard Consoles Ripeness is All. Fa–ther Son ties are traumatic. Get over through proper rites and observances. Let almighty Lord grant us strength to continue the great service to Tamil he initiated in all<br>S A Sankaranarayanan Geetha Sankaranarayanan Harish Rajaraman<br>Aarthi Ramkumar Lakshmi Poornima Srram |
| 808 | மறக்கமுடியவில்லை. அந்தக்குரலை இனி என்று கேட்போம்<br>Guna Seelan |
| 809 | தமிழுக்கு தமிழ்நாடு அரசு மரியாதை... தமிழுக்கும் தமிழனுக்கும் பெருமை<br>முனைவர் மு. கலைவேந்தன் |
| 810 | மகத்தான மனிதருக்கான மரியாதை<br>Perumaal M S |
| 811 | அயராது... தமிழுக்குத் தொண்டு செய்த...ஆருயிர் அப்பாவுக்கு மரணமில்லை...<br>Manimekhalai Siddharthar |
| 812 | ஓம் சாந்தி<br>Kodaifmsubramani Subramani |
| 813 | May his grand soul attain sadgathi<br>Chithra Narayan |
| 814 | Truly deserved honor<br>Sudhakar Sundaram |